Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2035 தை -26 09-02-2004 திங்கட்கிழமை ஓசை-356




# பாராளுமன்றம் கலைப்பு தொடர்பான முடிவு சனாதிபதியின் பிற்போக்கான நடவழிக்கையாகும்

## மேற்கு மற்றும் ஆசிய நாட்டு இராஜதந்திரிகள் அபிப்பிராயம்

**சிறிலங்காவில் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் வைப்பது என்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முடிவு ஒரு பிற்போக்கான ஒழுங்கற்ற நடவடிக்கையாகும் என மேற்கு மற்றும் ஆசிய நாட்டு இராஜதந்திரிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.**

சனாதிபதியின் இந்த நடவடிக்கையானது டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 45ஆயிரம் கோடி ரூபா கிடைக்கப்பெறுவதை தாமதப்படுத்தும். அவருக்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறோம். பொது நிதியைச் செலவு செய்யும் போது பொறுப்பற்ற முறையில் செயற்படுகிறார் என்பதே அது. சமாதான முன்னேற்றத்தைப் பொறுத்தே நிதிஉதவி செய்யப்படும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்தைக் கலைப்பதை விடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து இணக்கப்பாட்டை ஏற்படுத்துமாறு அமெரிக்காவும் யப்பானும் அழுத்தம் கொடுத்து எதிர்பார்த்திருந்த வேளை இருவாரங்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வடமேல் மாகாண சபை இன்றிரவு கலைக்கப்படும்

(கொழும்பு)

மாகாணசபையின் காலம் நேற்று முடிவடைந்த நிலையில் வடமேல் மாகாணசபை இன்று கலைக்கப்படவுள்ளது.

எனினும் ஏனைய மாகாண சபைகள் இன்று கலைக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட சட்டமூலத்தின் படி அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல் நடைபெறவேண்டும்.

அவ்வாறெனில் அந்த மாகாண சபைகளும் கலைக்கப்பட வேண்டும். எனினும் ஏனைய மாகாணசபைகளின் முதலமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டமையால் அந்த மாகாண சபைகள் இன்று கலைக்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## ஏப்.2இல் பொதுத் தேர்தல்; 13வது பாராளு.கலைக்கப்பட்டது!

(கொழும்பு)

சிறிலங்காவின் பதின்னான்காவது பாராளுமன்றிற்கான பொதுத்தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் இரண்டாந்திகதி நடைபெறவுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நேற்று முன்தினம் நள்ளிரவு பதின்மூன்றாவது பாராளுமன்றம் கலைப்பு தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலிலேயே அடுத்த பொதுத்தேர் தல் பற்றிய திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில் பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை எதிர்வரும் பதினேழாம் திகதிமுதல் வரும் 24ஆம் திகதிவரை தாக்கல் செய்யலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களால் தெரிவுசெய்யப்படும் பாராளுமன்றின் ஆட்சிக்காலம் ஐந்துவருடங்களாக உள்ள போதிலும் கடந்த நான்கு ஆண்டுகளில் பாராளு மன்றிற்காக பொதுத் தேர்தல் நடத் தப்படுவது இது மூன்றாவது தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மு. காங்கிரஸ் மரச்சின்னத்தில் தனித்தே போட்டியிடும்

### -ரவூப்ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஓட்டமாவடி வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி பாதுகாப்பமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பு எந்த விதத்திலும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் இதனால் பொ.ஜ. முன்னணியுடன் கூட்டு வைத்துக் கொள்வதற்கு கிழக்கு மாகாண முஸ்லிம்கள் விரும்பவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

## ம.வி.முன்னணிக்காகவே சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தார்

### முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் நோக்கத்திற்காக மட்டுமே சனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்ததாக அமைச்சர் ராஜிதசேனாரட்ண தெரிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி சனாதிபதி நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என சபாநாயகரிடம் கடிதம் மூலம் உறுதியளித்திருந்தார். எனினும் அதனை இன்று அவர் மீறியுள்ளார்.

வெற்றிதோல்வி என்பது ஐ.தே. கட்சிக்கு புதிய விடயமல்ல எனக் கூறிய அவர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக சமாதான முயற்சியில் முழுத்தடை ஏற்பட்டுள்ளது. எனவே மக்கள் இந்தத் தேர்தலில் சனாதிபதிக்கு உரிய பாடம் புகட்டுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று நாடாளுமன்றத்தைக் கலைத்த சனாதிபதி நாளை அமைச்சரவையை கலைப்பாராக இருந்தால் தமிழீழ விடுதலைப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த.உயர்தரப் பரீட்சை ஏப்ரல் இறுதிக்குப் பிற்போடல்

(கொழும்பு)

2004ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைகள் எதிர் வரும் ஏப்ரல் மாத இறுதியில் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்தப் பரீட்சைகள் ஏப்ரல் மாதம் முதல்வாரத்தில் ஆரம்பமாக இருந்ததாகவும், சனாதிபதி அவசர பொதுத்தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்ததையடுத்து தேர்தல் முடிவடைந்த பின்னர் பரீட்சையை நடத்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## பாராளு.கலைக்கப்பட்ட நிலையிலும் எமது குழுவின் பணிகள் பாதிப்பின்றி தொடரும்!

### -யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையால்யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படமாட்டாது என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

எவ்வித இடையூறும் இன்றி தமது பணிகளை மேற்கொண்டு வருவதாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வித இடையூறும் இன்றி இந்தப் பணியினை முன்னெடுத்துச்செல்ல கண்காணிப்புக்குழு உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் தற்போது தோன்றியுள்ள அரசியல் சூழலிலும் வடகிழக்கில் அமைதி நிலை தொடர்ந்தும் பேணப்பட்டு வருகிறது. இலங்கையின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிஅமைச்சர்களின் வாகனங்களை திரும்பப்பெற நடவடிக்கை

(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் வாகனங்கள் யாவும் அடுத்த 48மணி நேரத்துக்குள் மீளப் பெறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே சனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களின் எண்ணிக்கை 34ஆகும். பிரதி அமைச்சர்கள் அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்கள் என மொத்தம் 70 அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு எதிராக ஊழல் குற்றச்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் நடவடிக்கைக்கு பௌத்தமதத் தலைவர்கள் பாராட்டு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து திடீர் பொதுத்தேர்தலை நடத்த எடுத்த நடவடிக்கையை பௌத்த மதத் தலைவர்கள் பாராட்டியுள்ளனர் என சிறிலங்கா அரச செய்திகள் தெரிவிக்கின்றன.

முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைப்பு வழங்க ப்படும் என்சனாதிபதி தெரிவித்திருந்தும் அதற்கு இசைவாகநடக்கப் பிரதம மந்திரி தவறி உள்ளார் எனவும் பௌத்த மதகுருமார் பிரதமர் மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் சங்கைக்குரிய பேராசிரியர் வரகாவே தம்மாலோக தேரர் தெரிவிக்கையில; பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய தாம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சி.சு.கட்சியைச் சேர்ந்த மேலும் இருவருக்கு காபந்து அரசியல் அமைச்சுப் பதவி

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பராளுமன்ற உறுப்பினர்களான லக்ஸ்மன் கதிர்காமர் ரி.எம். ஜெயரட்ண ஆகியோர் புதிய அமைச்சர்களாக சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தபால் மற்றும் தொடர்பாடல் அமைச்சராக ரி.எம். ஜெயரட்ண பதவியேற்றுள்ளார். சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர், ரெலிகொம் தனியார் நிறுவனம் தபால் திணைக்களம் என்பன அவரின் பொறுப்பின் கீழ் வருகிறது.

தகவல் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சராக லக்ஸ்மன் கதிர்காமர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இதன்படி இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபனம், ஒலிபரப்புக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மாடு காணவில்லை

M.L.சிவப்புகுறி,K.L.குறி கறுப்பு சிவப்பு கலந்த எருது மாடு இரண்டையும் கண்டவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது கிளிநொச்சி காவல் துறையில் தெரிவிக்கவும்.தகவல் K.சேகர்,416,ஜெயந்திநகர். (4217)

### செலவுச்சிட்டைகள் தவறியமை

உப்பு உற்பத்திநிறுவன படிவம் 12A தொகுப்புடன் கூடிய செலவுச் சிட்டைகள் 07.02.2004. தினம் நிறுவனத் தில் இருந்து த.பொ.மே.நிறுவன மாவட்டச் செயலகம் கிளிநொச்சி செல்லும் போது தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உப்பு உற்பத்தி நிறுவனம், பரந்தன்,கிராமியஅபிவிருத்திவங்கி கிளிநொச்சி காரியாலயத்திலோ ஒப்படைக்கவும். (4220)

### தேங்காய் விற்பனைக்குண்டு

இரட்ணம் பாப், சுதந்திரபுரம் மத்தி உடையார்கட்டில் நல்ல நிலையில் தேங்காய்கள் (01லோட்) விற்பனைக் குண்டு.உடன்தொடர்பு கொள்ளவும். (4219)

## விண்ணப்பம் கோரல்

வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டுத் திணைக்களம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடகவிழா ஒன்றை நடத்தவுள்ளது. அத்துடன் நாடகப் போட்டி ஒன்றையும் நடத்த விருப்பதாக மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் தெரிவித்தார். நாடகப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், நாடக மன்றங்கள், குழுக்கள் அமைப்புக்களிடமிருந்து விண்ணப்பங்களை மாகாணப்பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கோரியுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித்திகதி 29.02.2004. உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள்திணைக்களம்,கல்வி அமைச்சு, திருகோணமலை என்ற விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. (25)

## பொலித்தீன் பாவனை தடை

அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சினால், 2003–12–17 ஆம் திகதிய தா.04/06/70ஆம் இலக்க கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட 13 /2003,இலக்க சுற்று நிருபப்படி, அனைத்துப் பொது இடங்களிலும் அலுவலகங்கள் அனைத்திலும் பொலித்தீன் பாவனையை முற்றாகதடை செய்யுமாறு எமக்கு அறிவித்துள்ளார்.

எமது பாவனையில் மிகவும் அதிகமாக பயன்படுத்தப்பட்டு இடர் விளைவுகளை தருகின்ற பொருட்களான பொலித்தீன் பாவனைகள் அனைத்தும் 10.02.2004. தொடக்கம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. வர்த்தக நிறுவனங்கள், தேநீர் உணவகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் அனைத்தும் "லஞ்சீற்" க்குப் பதிலாக, வாழை இலை, தாமரை இலை, தேக்கம் இலை மற்றும் வாழைத் தடல்கள் பாவிப்பதுடன், துணியால் கடதாசியால், சணலினால் மற்றும் புல்லினால் தயாரிக்கப்பட்ட பைகளைக் கொண்டு செல்வதற்குப் பயன் படுத்துமாறும் வேண்டப்படுகிறீர்கள், இதனை மீறிப் பயன்படுத்தும் வர்த்தகர்களுக்கும் உணவகங்களுக்கும் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் வியாபார நிலையங்களும் மூடப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**க.தனபாலசிங்கம்,**
விசேட ஆணையாளர்,
பிரதேச சபை,
பூநகரி.

(சி.9086)



# காஷ்மீர் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு இவ்வருடத்தின் இறுதிக்குள் எட்டப்படும்!

## சனாதிபதி முஷாரப் நம்பிக்கை



**(இஸ்லாமாபாத்)**

**காஷ்மீர் பிரச்சினைக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்வுஎட்டப்படும் என்று பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானின் கட்டுப் பாட்டு காஷ்மீர் பகுதியில் வைத்தே அவர் இக் கருத்தைக் கூறினார்.**

இந்தியா -பாகிஸ்தான் இரு தரப்புப் பேச்சுக்கள் இம்மாத இறுதியில் நடைபெற திட்டமிடப் பட்டுள்ளமை தெரிந்ததே. இந்நிலையில், இந்திய பொதுத்தேர்தலுக்குப் பின்னர் பேச்சுக்களின் வேகம் அதிகரிக்கும். காஷ்மீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்பட்டுவிடும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

காஷ்மீர் பிரச்சினையில் எமது நலன்களையெல்லாம் கைவிட நான் தயாராகி விட்டேன் என்று சில சுய நல சக்திகள் பாகிஸ்தானில் பிரச்சாரம் செய்து வருகின்றன. காஷ்மீர் பிரச்சினையிலும் ஏவுகணைத் தயாரிப்பு விடயத்திலும் விட்டுக் கொடுப்பவர்கள் பாகிஸ்தானின் துரோகிகளாக இருக்க முடியும். இக்கூட்டத்தில் பிரதமர் ஜபருல்லாகான் ஜமாலியே பேசியிருக்க வேண்டும். இந்தியாவுடன் ஏற்பட்டு வரும் சுமுக நிலைமை குறித்து நேரில் விளக்கம் அளிக்க வேண்டும் என்றுவிரும்பியதால்நானே வந்தேன். காஷ்மீர்பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்பட வில்லை என்றால் நம்பிக்கை ஊட்டும் நடவடிக்கைகளால் முன்னேற்றம் பலன்இல்லை.

ஐ.நா. வில் நிறைவேறிய காஷ்மீர் தொடர்பான தீர்மானத்தைக் கைவிடவும் தயார் என்று நான் பேசியதாக தவறான பொருள் தரும் வகையில் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரு தரப்புமே விட்டுக்கொடுக்கும் வகையில் பேச்சு நடத்தினால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு விடும் என அவர் மேலும் கூறினார்.

## நலன் விசாரிப்பு

பொடோ சட்டத்தில் இருந்து பிணையில் வெளிவந்துள்ள ம.தி.மு.கபொதுச்செயலாளர் வைகோவை தி.மு.க.துணை பொதுச் செய லாளர் ஸ்டாலின் இந்திய கம் யூனிஸ்ட் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் நல்லக்கண்ணு மாக்ஸிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சி யில் மாநில செயலாளர் வரதராஜன் ஆகியோர் நேற்று சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து நலன் விசாரித்தனர்.



அமெரிக்கப் பிரதிப்பாதுகாப்புச் செயலர் ஆர்மிரேஜை ஜப்பானின் விசேட சமாதான தூதர் யசுசிஅகாஷி டோக்கியோவிலுள்ள வாசஸ்தலத்தில் வரவேற்கிறார்.

# அணுசக்தித் திட்டங்களைப் பார்வையிட எவருக்கும் பாகிஸ்தான் அனுமதியளிக்காது

### -ஐ. நா. விற்கான நிரந்தரப் பிரதிநிதி அறிவிப்பு

அணுசக்தியுடன் தொடர்பான திட்டங்களைப் பார்வையிட எவருக்கும் அனுமதியளிக்கப்படமாட்டாது என பாகிஸ்தான் உறுதிபடக் கூறியுள்ளது. அணுசக்தி மற்றும் இது தொடர்பான முக்கிய அமைப்புக்களை வெளியிலிருந்து வந்து ஆய்வு செய்வதற்கு அனுமதிக்கப் படமாட்டாது என பாகிஸ்தான் உயர் மட்ட அரச அதிகாரியொருவர் அறிவித்துள்ளார்.

அணுவாயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் கையொப்பம் இடவில்லை எனவும், வெளியிலிருந்து வந்து ஆய்வு நடத்தவோ அல்லது அணுவாயுதம் தொடர்பான ஆவணங்களைப் பார்வையிடவோ அனுமதிக்க மாட்டோம் என ஐ.நா சபைக்கான பாகிஸ்தானின் நிரந்தரப் பிரதிநிதி பி.பி.சிக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.

எனினும் பாகிஸ்தான் அணுவாயுத தொழில் நுட்பத்தை உலகம் முழுவதிலும் பரப்பியதற் காக நடத்தப்படும் விசாரணையில் பாகிஸ்தான் தானேவந்து ஒத்து ழைக்குமென அவர் மேலும் கூறியுள்ளார்.

# மேற்குக்கரைப் பகுதியில் யூதர்கள் குடியேற்றம்!

பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியிலுள்ளயூதக் குடியேற்றங்களை மேற்குக்கரைப்பகுதிக்கு மாற்றுவதில் எவ்வித பலனும் இல்லையென அரபுலீக் தலைவர் அமீர் முஷா தெரிவித்துள்ளார்.

யூதக்குடியேற்றக்காரர்களை காஸாப் பகுதியிலிருந்து அகற்றும் இஸ்ரேலிய பிரதமரின் திட்டத்தை வரவேற்றுள்ளபோதிலும் அவர்களை மேற்குக்கரைப்பகுதிக்கு குடியமர்த்துவது அர்த்தமில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 11லட்சம் பலஸ்தீனர்கள் வசிக்கும் மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேலியப் படையினரின் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் பல யூதக்குடியேற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.





பறவைக்காய்ச்சல் பரவியுள்ள நிலையில் பம்பாய் வீதியில் "கோழி இறைச்சி சாப்பிடுவது சுகாதாரக்கேடு" எனும் வாசகத்துடன் சேவலைப் போன்று அலங்கரித்தும் காணப்படும் நபர்.

# அணுவாயுத தொழில்நுட்ப இரகசியங்களை பாகிஸ்தான் பாரியளவில் வெளிப்படுத்தவில்லை

### -அமெரிக்க வெளியுறவு அமைச்சு கூறுகிறது

பாகிஸ்தானின் அணுவிஞ்ஞானி அப்துல்காதிர் கானுக்கு அந்நாட்டு அரசாங்கம் மன்னிப்பு வழங்கியமை குறித்து பாகிஸ்தானுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்புடன் அமெரிக்க வெளிவிவகார செயலாளர் கொலின் பவல் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பாகிஸ்தானின் அணுவாயுத தொழில்நுட்ப இரகசியம் பாரியளவில் வெளிப்படுத்தப் படவில்லை எனினும் இது போன்ற அபாயகரமான சம்பவங்கள் இனி மேலும் நடந்து விடக்கூடாது என்பதற்காகவே இப்பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிடமிருந்த அணுவாயுத தொழில் நுட்ப இரகசியங்களை ஈரான், லிபியா ஆகிய நாடுகளுக்கு இரகசியமாக வழங்கிய குற்றச்சாட்டில் மேற்படி அணு விஞ்ஞானி உட்பட பல விஞ்ஞானிகளும் தீவிர விசாரணைகளுக்குள்ளாக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.



எதிர்க்கட்சியினரால் நாட்டின் அரசியலையும் பொருளாதாரத்தையும் சீர்குலைப்பதாகக் குற்றம் சாட்டப்படும் இராணுவ அதிகாரியான வெனிசுவேலாவின் சனாதிபதி ஹியூகோ சாவேஸை அவரின் ஆதரவாளர்கள், அவரின் 5 வருட ஆட்சிக்கால நிறைவைக் கொண்டாடுகின்றனர்.

# அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதில் பாரதிய ஜனதாக் கட்சி உறுதியாகவுள்ளது

### -பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

(புதுடில்லி)

அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டப்படவேண்டும் என்பதில் பாரதிய ஜனதாக்கட்சி உறுதியாக இருப்பதாகவும் ஆனால் இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க விரும்புவதாகவும் இந்தியப்பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் ஹைதராபாத்தில் பேரணி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் முற்றுப்பெறாமல் உள்ள ஆலயம் கட்டும் வேலையை செய்து முடிக்க மக்களின்புதியஆணையை நாடியுள்ளார். பரிதாபகரமான நிலையிலுள்ள காங்கிரஸ் நாட்டின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் என நம்பமுடியாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தியப் பாராளுமன்றமங்களவை கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரும் நிலையில் பிரதமர் வாஜ்பாய் பகிரங்கமாக இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 12மணிநேரத்தின் பின் குழந்தை மரணம்

தலையொட்டிப்பிறந்த பெண்குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை பயனளிக்காமையால் அக்குழந்தை இறந்தது.

சத்திரசிகிச்சையின்பின் உயிருடனிருந்த இக்குழந்தை12 மணிநேரங்களின் பின் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டொமினிக்கன்குடியரசைச் சேர்ந்த இப் பெண்குழந்தைக்கான சத்திர சிகிச்சை 11மணிநேரங்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### -சனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை-

# கெயிட்டியின் 4 ஆவது மாநகர் கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்தது

கெயிட்டியின் நான்காவது பெரிய நகரான செனட் நகரை ஆயுதக்குழுவொன்று தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

கெயிட்டின் பிரச்சினையை எதிர்நோக்கும் சனாதிபதி ஜீன் பேட்டன் அரிஸ்டைட் இற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டதோடு பொலிஸ் நிலையம் ஒன்றும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. இதேவேளை கெயிட்டியின் இரண்டாவது தலைநகரையும் கைப்பற்றப் போவதாக அந்த ஆயுதக்குழு தெரிவித்துள்ளது.

# தவறு யாருடையது?

பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடியுமா? என தற்போதைய ஆளும் கட்சி அரசியல் வாதிகள் சிந்திக் கக்கூடும். ஏன் முடியாது என உயரதிகாரிகள் நினைப்பர். அரசியல் வாதிகள் அவ்வாறு நினைக்கமாட்டார் கள். அவர்கள் தாம் மக்களுக்கு இதுவரை என்ன செய்துள்ளோம் என்று எண்ணுவார்கள்.

அவ்வாறு அவர்கள் எண்ணுவதும் சும்மாவல்ல. பாதையில் தெருவில் போகும் போது அவர்களுக்கு ஏற்படும் உணர்வினாலேயே உயர் அதிகாரிகள் அதாவது அமைச்சுச் செயலர்களுக்கு அவ்வாறு சிந்திக்கத் தேவையிராது. அவர்களுக்கு உலகம் என்பது குளிரூட்டப்பட்ட அறைகளும், நட்சத்திர விடுதிகளும், விடுமுறைக்கால விடுதிகளும், விமானப்பறப்புக்களுமே.


மக்களை ஆறுதல் படுத்திக் கொண்டு நாட்டை ஆளமுடியாது; மக்கள் எவ்வாறேனும் சீவியம் நடத்தட்டும். இல்லாவிடில் சாகட்டும் என்று நினைப்பவர்களே மேற்சொன்ன அதிகாரிகள்.

ஆனால் மக்கள் என்ன எண்ணுகிறார்கள் அதை அறிய பாதையில் தெருவில் சென்றால் மட்டுமே அவதானிக்க முடியும். சிறிலங்காவின் வரலாற்றில் கடந்த வரவு செலவுத் திட்டத்திலேயே அரச ஊழியர்களின் ஊதியம் மிக அதிகரிக்கப்பட்டது. எனினும் அதன் நன்மையை ஆளும் கட்சி பெற்றுக் கொள்ளக் கூடத்தெரியாதுள்ளது.

அரசு எங்கள் பைகளில் 1750 ரூபாவை திணித்துவிட்டு வரியாக 2000 ரூபாவை பெறுகின்றது என்பது அரச ஊழியர்களின் கருத்து. எமக்கு எதுவித ஊதிய அதிகரிப்புமில்லை. ஆனால் சம்பளத்துக்கு வெட்டு விழுகிறது என்பது தனியார் துறை ஊழியர்களின் புலம்பல். அது மட்டுமா ஓய்வூதியத்தை சில காசுகளால் அதிகரித்து அதனைப் பெறுவதில் தீவிர சட்ட முறைகளைத் திணிக்கிறது என்பது ஓய்வூதியம் பெறுவோரின் அவலம்.

போக்குவரத்து கட்டண அதிகரிப்பு வற் வரியினால் பொருட்களின் விலையேற்றம் ஒரு பக்கம், "பொருளாதாரத்தில் அரசு வளர்ச்சியுற்றிருக்கிறது. எமது கைகளில் ஒரு காசும் மிஞ்சுவதில்லை." இது 'வீட்டு "பட்ஜட்" டை தீர்மானிக்கும் குடும்ப மாதரின் குரல்கள்.

இரண்டு வருடங்களாக பொதுமக்களின் வயிற்றை கட்டியிருந்து தற்போது வரவு-செலவுத் திட்டத்தில் நிவாரணம் வழங்கப்பட்டிருந்தாலும் சரியான முறையில் அவற்றை வழங்கி மக்களின் மனதை வெல்ல அரசுக்குத் தெரியவில்லை. இதனால் மக்களின் வெறுப்பும் ஆளும் கட்சி மீது அதிகரித்துள்ளது. இவற்றை உணரும் போது தாம் எவ்வாறு வாக்குக்கேட்டு மக்களிடம் செல்ல முடியும். என நினைக்கும் அரசியல் வாதிகள் மேற்கூறப்பட்ட அதிகாரிகளை குறிப்பாக திறைசேரி அதிகாரிகளை சாடுகின்றனர். திறைசேரியின் கொள்கைகளால் மக்களிடம செல்ல முடியாதிருப்பதாக அமைச்சர்களும் அரசியல் வாதிகளும் அங்கலாய்க்கின்றனர். அதனால் விழிப்புற்ற அமைச்சர் சொக்ஸி தற்போது சில அத்தியாவசிய பொருடகளின் விலையைச் சற்றுக்குறைத்துள்ளார். எனினும் இதன் நன்மை ஒரு சிலருக்குக் கிடைக்கிறது. பலருக்கு கிடைப்பதில்லை. இந்தத் தவறும் அரசினால் ஏற்படுகின்றது. அதனால் இப்படியானவர்களை மனிதர் என்று கூறாமல் இயந்திர மனிதர்கள்(றோபோ) என்று கூறலாம்.



வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வரியறவீட்டை அறிவித்துப் பொருட்களின் விலையை அதிகரித்தது. தற்போது பொருட்களின் விலையை குறைக்கின்றது. இதனை முன்கூட்டியே செய்வதற்கு அரசுக்கு மூளையில்லையா?

அதிகாரிகள் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகக் கூறி இவ்வாறு செய்கின்றனர். பொருளாதார மேம்பாடு என்பது இதனையல்ல மக்களின் தேவையை பூர்த்தி செய்வதே பொருளாதார முன்னேற்றம். ஆகவே மனித இயந்திரங்கள் என இவர்களைக் கூறுவதும் சரியே. ஆயினும் தாம் நினைத்த மாதிரி மக்களுக்காக செயற்படவும் அதிகாரம் இருக்க வேண்டும் என அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் சிந்திக்கின்றனர். சில அமைச்சுக்களில் உள்ள செயலாளர் போன்ற அதிகாரிகள் மாற்றுக் கட்சியினராக இருப்பதே இதற்குக் காரணம். திறைசேரியில் நிதியில்லை என்று கூறி எந்த ஒரு ஆளும் கட்சி ஆதரவாளருக்கும் பதவி வழங்கப்படவில்லை. இப்படியான அதிகாரிகளால் மக்களிடம் கட்சி ஆதரவாளர்களிடம் சென்று எவ்வாறு வாக்குகளைக் கோர முடியும்? என சில அமைச்சர்களே வினாவெழுப்புகின்றனர். அரசியல் வாதிகளின் நிலை இவ்வாறிருக்க உயரதிகாரிகள் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் எனக் கூறிக்கொண்டு வெளிநாட்டுப் பிரஜைகளையும் முதலீட்டாளர்களையும் நன்கொடை வழங்குபவர்களையும் திருப்திப்படுத்தவே முனைகின்றனர். அதனால் வெளிநாடுகளின் நற்சான்றுகளைப் பெறுகின்றனர். அத்துடன் அரசு கவிழ்க்கப்பட்டாலும் அவர்கள் வெளிநாட்டில் உயர்பதவிகளைப் பெற்றுச் சென்று விடுவர். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பொருளாதார மேம்பாடு கண்டு அரசுக்கு ஆதரவு அளிப்பதாகவே அரசு நினைத்தது. இன்று நடப்பது வேறு. மூன்று அமைச்சுக்களை சனாதிபதி கையேற்றிருந்தாலும் இருபகுதியினரையும் இணைந்து அரசு நடத்தவே அவர்கள் கூறுகின்றனர். தற்போதும் புதிய அரசொன்றை அமைக்க கொழும்பில் கூடியிருப்பவர்களும் ஐ.தே. முன்னணியால் செப்புக் காசும் நன்மை பெறாத ஐ.தே.கட்சி ஆதரவாளர்களே.

இந்த அரசு நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் சிந்திக்கலாம். அரசாங்கம் என்பது சரியான வழியில் அரசியல் நடத்தும் நிறுவனம் ஒன்றையே அரசாங்கம் ஒன்றை வழி நடத்த மக்கள் இருப்பதும் உண்மையே. மக்கள் மனதை வெல்லும் அரசு ஒன்றே அவசியமானது. தற்போதைய நிலையில் மக்களின் மனங்களை வெல்ல அரசியல் திட்டங்களுமில்லை. கட்சிக்காரர்களின் மனங்களை வெல்லும் திட்டங்களுமில்லை. இந்த அரசாங்கம் எப்படியான நிலையில் இருந்த நாட்டை பொறுப்பேற்றது என்றோ எதிர்காலத்திட்டங்கள் என்ன என்பது பற்றியோ மக்களுக்கு அறிவிக்கக் கூடியதாகவும் இல்லை.

ஆயினும் விரைவில் தேர்தல் ஒன்று நடக்கப்போகிறது இந்த வேளையில் ஜே.வி.பி - சு.க கூட்டணி ஆளவேண்டும் என மக்கள் நினைத்தால் இந்த அரசு கவிழும். அல்லது "ஜே.வி.பி பொ.ஐ. முன்னணியுடன் இணைந்து கடந்த காலங்களிலும் ஆட்சி நடத்தி எதைக் கிழித்தது." "விடுதலைப் புலிகளுடன் சமாதானத்தை ஏற்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்தி மின்சாரத்தை வெட்டாமலும் அரசு நடத்தியது தானே. அதுவும் எதிர்க்கட்சியிடம் இராணுவம், பொலிஸ் ஆகியன இருந்த நிலையிலும் அதிகாரமுள்ள சனாதிபதி பதவி, மாகாண சபை ஆட்சி என்று எல்லாம் எதிர்க் கட்சியிடம் இருக்கும் போதுதானே. இன்னும் நாலு வருடங்கள் இருந்த மாதிரி இருக்கட்டும்" என மக்கள் நினைத்தால் ஐ.தே. முன்னணி புத்துயிர் பெற்று விடும்.

உப்புல் ஜோசப் பெர்னாண்டோ
(லங்காதீப)
மொழியாக்கம் வடிவேல்

# 41 விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(திருமலை)

ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் மூதூர் பிரதேசத்தில்41 விளையாட்டுக் கழகங்களுக்குக் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் வழங்கப்பட்டன.

இது தொடர்பான நிகழ்வுகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான ஈச்சிலம்பற்றில் செண்பகா மகாவித்தியாலயத்தில் வெள்ளிக்கிழமையும், பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரியில் சனிக்கிழமையும் நடத்தப்பட்டன.

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன், க.துரைரத்தினசிங்கம், விடுதலைப்புலிகள் வெருகல் பிரதேசப்பொறுப்பாளர் தங்கன் ஆகியோர் ஈச்சிலம்பற்று நிகழ்வில் பங்கு பற்றினர்.

ஈச்சிலம்பற்று விவேகானந்தா, மூட்டுச்சேனை கம்பன், வெருகல் முகத்துவாரம், காவேரி, மாவடிச்சேனைசெல்வா,பூநகர் நைன்பிளவர்ஸ், கறுக்காமுனை புதுமலர், இலங்கைத் துறைமுகத்துவாரம் உதய சூரியன், இலங்கைத்துறை செம்பக வல்லி, கல்லடிகுறிச்சி புன்னையடி இளங்கதிர், வெருகல் பிரதேச சம் மேளனம் ஆகிய 12 விளையாட்டுக் கழகங்களுக்கு 75 ஆயிரம் ரூபா விளையாட்டு உபகரணங்கள் வழங் கப்பட்டன.

சகாவெட்டி, மேன்காமம், பட்டித்திடல், சங்குவேலி, மல்லிகைத்தீவு, நாராயணபுரம், முன்னம்போடி வெட்டை, பள்ளிக்குடியிருப்பு, பாணுகேணி, பெரியவெளி, சூனித்தீவு, சம்பூர் மத்தி, கடற்கரைச்சேனை கட்டைப் பறிச்சான் கிழக்கு, அம்பன் நகர், பாட்டாளிபுரம், நல்லூர், வீரமாநகர், சந்தோஷபுரம், சேனையூர், இளக்கந்தை, இறால்குழி, பச்சநூர், புளியடிச்சோலை, சம்பூர் மேற்கு, கூடைக்குடா, தங்கபுரம், தமிழ்ப்பிரிவு பிரதேச சம்மேளனம் ஆகிய 29 இளைஞர் கழகங்களுக்கு 75ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் சனிக்கிழமை பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், க.துரைரத்தினசிங்கம், விடுதலைப் புலிகள் திருமலை மாவட்ட மகளிர் அரசியல்துறை மற்றும் கல்விக் கழகப் பொறுப்பாளர் காருண்யா, நிதிப்பொறுப்பாளர் நிஷாந்தன் ஆகியோரும் பங்குபற்றினர். பள்ளிக்குடியிருப்பு நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம், திருமலை வலயக் கல்விப்பணிப்பாளர் சு.திலகரத்னம், மூதூர் வலயப் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.குத்தாஸ் ஆகியோரும் பங்குபற்றினர்.

(25)

# குற்றச் செயல்களைத் தடுக்க காவல் துறை நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கடந்த சில நாட்களாக அக்கராயன் காவல்துறையினர் இரவு ரோந்து காவல் கடமைகளில் ஈடுபட்டுவருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

அக்கராயன் காவல் பணிமனை உப பொறுப்பாளர் தலைமையில் தற்போது தினமும் கோணாவில், அக்கராயன்,ஸ்கந்தபுரம் பகுதிகள் மற்றும் முக்கிய சந்திகளில் அக்கராயன் காவல்துறையினர் இரவு ரோந்து தொடர் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந் நடவடிக்கை காரணமாக மேற்படி பிரதேசத்தில் குற்றச் செயல்கள் வெகுவாகக்குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)

# வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி

மன்னார் சித்திவிநாயகர் தேசிய இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் மூன்று இல்லங்கள் கலந்து கொண்டன. முதலாம் இடத்தை வள்ளுவர் இல்லமும், இரண்டாம் இடத்தை பாரதி இல்லமும், மூன்றாமிடத்தை இளங்கோ இல்லமும் பெற்றன. பிரதம விருந்தினராக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் கலந்து கொண்டார். (மி)

# உயர்தர மாணவர்களின் பிரியுபசார வைபவம்

மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய கல்லூரியில் 2004 ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு பிரிவுபசார வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட வேறு பாடசாலையிலிருந்து வருகை தந்த மாணவர்களும், மற்றும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(மி)

# சிறிய பாலங்கள் சேதம்

(முள்ளியவளை)

நெடுங்கேணிக்கும், புளியங்குளம் சந்திக்கும் இடைப்பட்ட இரு சிறிய பாலங்கள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ள நிலையில் பாலத்தின் மேல் சிறிய தகரம் வைக்கப்பட்டு வாகனங்கள் செல்வதை அவதானிக்க முடிகிறது.

வாகன ஓட்டுனர்களும் பெருசிரமப்பட்டே இப்பாலங்கள் ஊடாக வாகனங்களைச் செலுத்துகின்றனர்.

இப் பாதை சீர் இன்மையினாலும் வாகனம் மேலும், முல்லைத்தீவு தண்டுவான் ஊடாக நெடுங்கேணி வீதியின் இருமருங்கும் பற்றைகள் மிக மோசமாக வளர்ந்து பிரயாணம் மேற்கொள்ள முடியாத நிலையும் காணப்படுகிறது.

(20)



ஸ்கந்தபுரம் மரப்பாலம் தற்போது பாரிய சேதத்திற்குள்ளாகியிருப்பதுடன் இப்பாலத்தினூடாக உந்துருளிகள், ஈருருளிகளில் பயணிப்பவர்கள் மிகுந்த அச்சத்துடனேயே பயணித்து வருவதனை நேரில் காணக்கூடியதாகவுள்ளது.

(படம் சோதி)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு சிறிலங்கா கடற்படை துணை போகின்றது!

## நெடுந்தீவு கடலில் கடல் வளங்கள் அபகரிப்பு

**இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களின் அத்துமீறி மீன்பிடிக்கும் நடவடிக்கைகளுக்கு சிறிலங்கா கடற்படையினர் ஆதரவளித்து வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.**

வாரத்தில் திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், உள்ளூர் மீனவர் கடலில் இறங்கி மீன்பிடிக்க அச்சம் தெரிவித்து வருகின்றனர். சிறிலங்கா கடற்படையினரின் இத்தகைய செயலால் கடல் வளங்கள் திட்டமிட்டு அபகரிக்கப்பட இடமளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஊடுருவும் இந்திய மீனவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க சிறிலங்கா கடற்படை தயக்கம் காட்டி வருவதாக மீனவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதனால், தொடர்ந்தும்இந்தியமீனவர்களின் ஊடுருவல் அதிகரிக்க வாய்ப்பேற்பட்டுள்ளது.

இந்நிலையில், நெடுந்தீவு கடற்பகுதி எல்லைகளில் நூற்றுக்கு மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள் நேற்று முன்தினம் 2.30 மணி முதல் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதை கரையிலிருந்து அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வேளையில் 15க்கு மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகளை சிறிலங்கா கடற்படையினர் தம்மிடம் அழைத்து வைத்து விசாரணை செய்த பின் விடுவித்ததை அவதானிக்க முடிந்துள்ளது.

இதன் காரணமாக மேற்படி இந்திய இழுவைப் படகுகளுக்கு சிறிலங்கா கடற்படையினர் ஆதரவு வழங்குவதாக எண்ணத் தோன்றியுள்ளது என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலைமைகள் திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில் தொடர்ந்து நடைபெறுவதால் உள்ளூர் மீனவர்கள் தமது உடமைகளுக்கு சேதம் ஏற்படலாம் என அஞ்சி கடலுக்குச் செல்லத் தயங்குகின்றனர்.

## கணினிகள் வழங்கல்

பாராளுமன்றஉறுப்பினர் க.துரைரட்ண சிங்கம் தனது பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் ஒதுக்கிய நிதி மூலம் பள்ளிக் குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரி, கிளி வெட்டி மகா வித்தியாலயம், கட்டைப் பறிச்சான் விபுலாந்தா வித்தி யாலயம், சம்பூர் மகாவித்தி யாலயம் ஆகியவற்றுக்கு தலா ஒரு கணினி வீதம் வழங்கியுள்ளார் (25)



கோணாவில் ஸ்கந்தபுரம் வீதியில் நேற்றுக் காலை பார ஊர்தி வீதியின் குறுக்காக புதைந்தமையின் காரணமாக மேற்படி வீதி போக்குவரத்து பல மணி நேரம் முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. இப்பார ஊர்தி புதையுண்டுள்ளமையை படத்தில் காண்க. (படம்: சோதி)

# குடாநாட்டு பிரதேச செயலகங்களுக்கு சிறிலங்கா பொலிசாரின் பாதுகாப்பு!

## தாக்குதல்களைத் தடுக்க நடவடிக்கையாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் பொலிஸ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச செயலகங்கள் இனம் தெரியாதோரால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறான தாக்குதல்களைத் தடுப்பதற்காகவே பிரதேச செயலகங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ் அலுவலகங்களில் கடமையிலீடுபட்டிருக்கும் பொலிசார் கருமங்களை ஆற்றுவதற்காக செயலகங்களுக்குச் செல்வோரை விசாரணைகளுக்கு உட்படுத்துவதுடன் சிலரின் அடையாள அட்டைகளையும் சோதனை செய்து வருகின்றனர். இதனால் மக்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டுள்ளது. (33)

# யாழ்.அச்செழு படைமுகாமில் சிப்பாய் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை

யாழ்.அச்செழு படைமுகாமில் பணியாற்றி வந்த இராணுவ சார்ஜன்ட் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர் றுவான்வெலப் பகுதியைச் சேர்ந்த என்.பி.பியதிலக (42வயது) என அடையாளங்காணப்பட்டுள்ளார்.

அச்செழுவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தில் 51வது படைப் பிரிவைச் சேர்ந்தவரென தெரிவிக்கப்படும் மேற்படி சார்ஜன் தனது அறையில் தங்கியிருந்த வேளையிலேயே தற்கொலை செய்துள்ளார்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.55மணியளவில் அவரது அறையினுள் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் அதையடுத்து சக சிப்பாய்கள் அங்கு விரைந்த வேளையில் ரி-56ரக துப்பாக்கியை இயக்கியபடி அவர் வீழ்ந்து கிடந்ததாகவும் பொலிஸாரிற்கு அளிக்கப்பட்டவாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் படுகாயமடைந்திருந்த இவர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படும் வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை பலாலி இராணுவ வைத்திய சாலைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த மல்லாகம் நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் மரண விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். சடலத்தை அவரது சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்க அனுமதியளித்த நீதவான், கொழும்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் சடலத்தை பாரப்படுத்தி பிரேத பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்கவும் பொலிசாரைப் பணித்துள்ளார். (27)

### -சிங்கக் கொடியை அகற்றிய சந்தேகத்தில்-

# கைதான மூவரை விடுவிக்காமையால் மன்னாரில் மக்கள் பெரும் விசனம்!

(மன்னார்)

மன்னாரில் கடந்த நான்காம் திகதி சிறிலங்காவின் தேசியக் கொடியை அகற்றியதாக சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட மூவர் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

இதனால் மன்னார் மக்கள் விசனமடைந்துள்ளனர். இதன் காரணமாக மீண்டும் ஒரு கடையடைப்பு ஹர்த்தால், வாகனநிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் இறங்கும் நிலை தோன்றியுள்ளது.

மேற்படி கைது செய்யப்பட்டவர்கள் எதுவித குற்றமும் இன்றி திட்டமிட்டு கைது செய்ததாகவும் அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும், தாமதம் ஏற்படும் பட்சத்தில் மீண்டும் ஒரு ஆர்ப்பாட்டம் ஏற்படும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# ஏப்ரல் வரை வரட்சி தொடரும்!

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி நிலை மேலும் ஓரிரு மாதங்களுக்குத் தொடரும் எனவும், பொதுமக்கள் நீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாகப் பாவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் மேலும் வரட்சி நிலையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வரட்சி நிலை ஏப்ரல் வரை தொடரும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. இதனால் சிறிலங்காவில் மின்சாரத்தைப் பெற வேறு வழிகளைக் கையாளவும் நீர்வழங்கலுக்கும் புதிய நடைமுறையைக் கையாளவிருப்பதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்.இல் பெண்ணுரிமை பேண பொலிசாருக்கு அறிவுரை

(யாழ்ப்பாணம்)

பெண்ணுரிமைகள் தொடர்பாக யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சிறிலங்கா பொலிசாருக்கு கருத்தரங்குகளை வழங்கும் நடவடிக்கைகளில் -இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் பெண்ணுரிமை மீறல்களில் கணிசமான அளவு உரிமை மீறல்கள் பொலிசாராலும் இடம்பெற்று வருவதைத் தொடர்ந்து மனித உரிமைகள்ஆணைக்குழுவினர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது பெண்களுக்குள்ள உரிமைகளை மீறாது பொலிஸ் அதிகாரிகள் நடந்து கொள்ள வேண்டும் எனவும், பல்வேறு கருமங்களுக்காகவும் பொலிஸ் நிலையங்களிற்கு வரும் பெண்களை பெண் பொலிசாரே அணுகி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மொழிரீதியான இம்சைகள் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். (33)

# இரு கிளைகள் திறப்பு

(மல்லாவி)

சேமமடு மற்றும் ஆறுமுகத் தான் புதுக்குளம் பகுதிகளில் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு கிளைகள் அண்மையில் சங்கத்தலைவர் பூகுமாரகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திறந்து வைக்கப்பட்டது.

வன்னி புனரமைப்பு நிதியின் கீழ் புனரமைக்கப்பட்ட இவற்றில் ஆறுமுகத்தான் ப.நோ.கூ.சங்க கிளை நிலையத்தை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

சேமமடு ப.நோ.கூ.கிளை நிலையத்தை வவுனியா மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை நிர்வாக உத்தியோகத்தர் க.இரத்தினம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இவ் வைபவத்தில் பதில் பொது முகாமையாளர் வீ.கணேசநாதன், பொதுச் செயலாளர் இ.அமிர்தலிங்கம் மற்றும் பொதுச் சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (24)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர் தமிழீழ மாணவர் அமைப்பால் கௌரவிப்பு

துணுக்காய் வலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு தமிழீழ மாணவர்அமைப்பினால் மல்லாவி மேஜர் முரளி கணினிப் பயிற்சி நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் துணுக்காய் வலய மாணவர் அமைப்பு பொறுப்பாளர் வெண்ணிலா தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரினை முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் தீபன், சமாதான நீதவான் செல்வரட்ணம் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு ஏற்றி வைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து கௌரவிப்பு உரையினை மல்லாவி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா, கிராம சேவையாளர், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தேவேந்திரன் ஆகியோர் ஆற்றினர்.

துணுக்காய் வலயத்தில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற மு/ அனிச்சங்குளம் பாடசாலை மாணவி தட்சாயினிக்கான பரிசினை வலயக் கல்விப் பணிப்பாளர் வழங்கி பரிசில் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், கணினி நிலைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்தனர்.

இம்மாணவர்கள் அனைவருக்கும் தமிழீழ மாணவர் அமைப்பால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர் தமதுரையில் வலயக் கல்விப் பணிமனை, பாடசாலை, பெற்றோர்கள் இம்மாணவர்களைக் கௌரவிப்பதற்கு முன்னர் தமிழீழ மாணவர் அமைப்பு இம்மாணவர்களைக் கௌரவிப்பதை இட்டு இவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இம்மாணவர் அமைப்பு எமது வலயக் கல்விப் பணிக்கு ஆற்றும் சேவை எம்மை மேலும் உற்சாக மூட்டுவதாகவும் உள்ளது. இம்மாணவர்களைப் போல கூடுதலான புள்ளிகளைப் பெற்றும் பெரும்பாலான மாணவர்கள் வெட்டுப் புள்ளியை அண்மித்தவாறு இந்த சந்தர்ப்பத்தை இழந்து நிற்கின்றார்கள் அவர்களையும் இவ் இடத்தில் வாழ்த்துகின்றேன். எமது வலயத்தில் 2004ஆம் ஆண்டு கூடுதலான மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தியடைவார்கள். அதற்கான தயார்படுத்தல்களை எமது வலயப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்றார்.

வன்னிமக்களின் தேவைகளை நிறைவு செய்யும்

# மருதம் வாணிபத்தின்

மற்றுமோர் புதிய சேவை

**காலணிவாணிபம்** அத்துடன் **அணைகலன் வாணிபம்**

சிறப்புப் பகுதி

ஆரம்பம்:- 09.02.2004 திங்கட்கிழமை





# மருதம்

காலணிவாணிபம்

அணைகலன்வாணிபம்

கந்தசுவாமி கோயில் முன்பாக,
பிரதான சாலை,
கிளிநொச்சி.

வணிகர்களுக்கு சிறப்புக் கழிவுகள் வழங்கப்படும்.

தொலைபேசி:-021-2285706. தொலைநகல்:-021-2285706





பாட்டா BATA ← வன்னிக்கான முகவர் → நீல் கமல் NILKAMAL

(4221)



# வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்)

## புனரமைக்கப்பட்ட குளங்க்ள் கையளிக்கும் வைபவ

# அழைப்பிதழ்

1. மருதங்குளம்
2. சிறாட்டிக்குளம்
3. கரம்பைக்குளம்
4. மருதமடுக்குளம்
5. கூழாமுறிப்புக்குளம்
6. காஞ்சூரமோட்டைக்குளம்
7. இடைக்கட்டுக்குளம்

**காலம்** :- 1,2,3 (10/02/2004)
4,5,6,7 (12/02/2004)

**நேரம்** :- காலை 10.00 மணி

**இடம** :- 1,2,3 (பிரதேச செயலகம்-துணுக்காய்)
4,5,6,7 (பிரதேச செயலகம்-புதுக்குடியிருப்பு)

**பிரதம விருந்தினர்**

திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்
அரசாங்க அதிபர்-முல்லைத்தீவு மாவட்டம்.

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு.முகுந்தன் அவர்கள்
பொறுப்பாளர், அரசியல்துறை
முல்லைத்தீவு மாவட்டம்.

திரு.முல்லைவீரன் அவர்கள்
நீர்ப்பாசனப் பொறுப்பாளர்
பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்
முல்லைத்தீவு மாவட்டம்.

NEIAP

## நிகழ்ச்சி நிரல்

* மங்கள விளக்கேற்றல்
* தேசியக்கொடியேற்றல்
* அகவணக்கம்
* தலைமை உரை
* தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு பிரதிநிதி உரை
* தமிழீழ நிர்வாக சேவை பிரதிநிதி உரை
* தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதி உரை
* விருந்தினர்கள் உரை
* குளங்கள் கையளிக்கும் நிகழ்வு

அன்புடையீர்!
திரு/திருமதி/செல்வி ..............................................
..............................................
..............................................
..............................................

எமது நியாப் திட்டத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டுக்கெனத் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட குளங்கள் கையளிக்கும் நிகழ்வில் தங்களைக் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரதி திட்டப் பணிப்பாளரும்,**
**பணியாளர்களும்.**
**வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்)**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி-7147)



## சிந்தனைக்கு

மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 09-02-2004


## மக்கள் விரோத நடவடிக்கை

புலி வருகின்றது, புலி வருகின்றது என்ற பகிடி நிஜமாகியது போல் ஐ.தே.முன்னணி அரசாங்கம் கலைக்கப்படும், கலைக்கப்படும் என்ற அறிவிப்பும் நிஜமாகிவிட்டது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறிலங்காவின் பாராளுமன்றத்தை நேற்று முன்தினம் நள்ளிரவில் கலைக்கும் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா ஐ.தே. முன்னணி அரசாங்கத்தை எவ்வேளையிலும் கலைக்கலாம் என்பது அவர் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டதை அடுத்தும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்ததைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கப்பட்டதொன்றே ஆயினும், பாராளுமன்றக் கலைப்பு எப்பொழுது இடம்பெறும் என்பது குறித்த எதிர்பார்க்கை உறுதி செய்யப்படாததாக ஆருடங்கள் தெரிவிக்கப்படுபவையாக மட்டுமே இருந்து வந்தது.

இந்நிலையில், சனாதிபதி சந்திரிகாவின் சனி இரவு அறிவிப்பானது, ஆருடங்களுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதாக விவகாரத்தை முடிவிற்குக் கொண்டு வருவதாகியுள்ளது. இந்நிலையில், மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாகப் பாராளுமன்றத் தேர்தல் ஒன்று நடத்தப்படுவதான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஒரு வகையில் இது ஜே.வி.பி.யின் கோரிக்கையை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவு செய்துள்ளதாகவே கொள்ளத்தக்கதாகும். அதாவது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்வது தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது ஜே.வி.பி. பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னுரிமைஅளித்திருந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

சனாதிபதி சந்திரிகா அரசியல் யாப்பின் பிரகாரம் ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டவராக இருப்பினும், இவ் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையானது ஒரு மக்கள் விரோத நடவடிக்கை என்பதில் சந்தேகத்திற்கு இடமேதுமில்லை. அதாவது, மக்களின் உணர்வுகளுக்கும், தீர்மானங்களுக்கும் மாறாக அவரது செயல் அமைந்துள்ளது எனலாம்.

ஏனெனில், ஐ.தே. முன்னணியானது, விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என வாக்குறுதி அளித்தே தேர்தலில் வெற்றிபெற்றிருந்தது. மறுவளமாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பொ.ஐ. முன்னணி கொண்டிருந்த நிலைப்பாட்டை மக்கள் நிராகரி[illegible]தே ஆட்சி அதிகாரத்தை ஐ.தே. முன்னணியிடம் [illegible]ள் ஒப்படைத்தனர்.

இந்நிலையி[illegible] அரசியல் யாப்பின் அடிப்படையிலான அதிகாரங்கள் [illegible]க் கூறிக்கொண்டு மக்களின் ஆணையை நிராகரித்தமை[illegible]ானது, ஒருபுறம் சனநாயக விரோத நடவடிக்கையாகவும், இன்னொரு வகையில் மக்களின் நம்பிக்கைக்குத் துரோகம் இழைத்ததுமான செயலாகும். ஐ.தே. முன்னணி அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு மக்கள் அங்கீகாரம் அளித்திருந்தனர் என்ற நிலையில் அவ் அரசாங்கம் புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளுக்கு சனாதிபதி சந்திரிகா இடையூறு விளைவித்தல் என்பது அவரின் மக்கள் விரோதப் போக்கை வெளிப்படுத்துவதாகவே கொள்ளத்தக்கதாகும்.

அது மாத்திரமல்ல, சனாதிபதி சந்திரிகாவின் இந்நடவடிக்கையானது, சர்வதேச சமூகத்தினதும் அபிப்பிராயத்திற்கும் மாறானதும், எதிரானதுமாகும். ஏனெனில், இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரமும், ஒத்துழைப்பும் போதியளவில் இருந்து வந்துள்ளது. அவை சமாதான முயற்சிகளில் நம்பிக்கையும் கொண்டிருந்தன.

ஆனால், சனாதிபதியின் இந்நடவடிக்கையானது, சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையையும் சிதைத்துள்ளது. சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படும் எனத் தெரிவிக்கின்ற போதும் இதன் மீது எவரும் நம்பிக்கை கொள்வார்கள் என்பதற்கில்லை. ஏனெனில், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எப்பொழுதும் நம்பிக்கைகுரியவராக நடந்து கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, அவரது தற்போதைய கூட்டணியான ஜே.வி.பி.யினர் மீதும் நம்பிக்கை வைக்க எவருமே தயாராக இல்லை.

சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தைக் கலைத்தமைக்குக் காரணம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளாக இருக்கலாம். ஆனால், சமாதான முயற்சிகளை முன்னெடுத்த அரசாங்கத்தை கலைத்தமையும் - அதற்கு அடிப்படையாகப் பாதுகாப்புக் காரணங்களை முதன் நிலைப்படுத்த முற்பட்டமையும், சமாதான முயற்சிகளுக்கு மாறானதென்பதை எந்தவித அடிப்படையிலும் நிராகரிப்பதற்கு முடியாததாக்குகின்றது.

இந்த நிலையில், சனாதிபதி சந்திரிகாவின் பாராளுமன்றக் கலைப்பானது இலங்கை மக்களுக்கு அவர் செய்த துரோகம் என்பது மட்டுமல்ல, சர்வதேச சமூகத்திற்கு அவர் கொடுத்த ஏமாற்றம் என்று கூடக் கூறலாம். இதன் மூலம் அவர் இலங்கையில் சமாதானத்திற்கும், அமைதிக்கும் பெரும் அச்சுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளார் எனின் தவறாகாது.

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடிப்பின் மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல்!

### -சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடிக்கப்படுமாயின் தாம் மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்ய நேரிடும் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் எச்சரித்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இவரது பதவிக்காலத்தை நீடிக்க சனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதையடுத்து இவ் அறிவிப்பை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர்களுக்குரிய பதவிஉயர்வுகள் கிடைக்காமல் போகும் என்பதாலேயே அவர்கள் இம் முடிவுக்கு வந்துள்ளனர். எனினும் 14 ஆம் திகதி பதவிமுடிவுக்கு வராவிட்டால் மட்டுமே இம்மனுத் தாக்கலை செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# இந்தியக் கடற்படைத் தளபதியின் சிறிலங்காவுக்கான விஜயம் ரத்து!

(கொழும்பு)

இந்திய கடற்படைப் பிரதம தளபதி மாதவரேந்திரசிங்கின் சிறிலங்காவுக்கான விஜயம் மீண்டும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இவா இன்று நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இங்கு வரவிருந்தார். எனினும் இவரது பயணம் ஒத்தி வைக்கப்பட்டது. இதற்கான காரணம் வெளியிடப்படவில்லை.

மேற்படி தளபதி சிறிலங்காவில் தங்கியிருக்கும் போது திருகோணமலை உட்பட பல கடற்படைத்தளங்களுக்கும் விஜயம் மேற்கொள்ள ஏற்பாடாகியிருந்தது. அத்துடன் சனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலர், சிறில்ஹேரத், கடற்படைத்தளபதி தயாசந்தகிரி ஆகியோரையும் சந்திக்கவிருந்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதமும் இவரது பயணம் ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையில் பாகிஸ்தான் கூட்டுப்படைத்தளபதி சிறிலங்காவுக்கு விஜயம் செய்யவிருந்த தகவலை சிறிலங்கா இந்தியாவுக்கு தெரிவிக்காததற்கு ஒரு காரணமாக இவ விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# பங்களாதேஷ் முன்னாள் சனாதிபதி சிறிலங்கா வருவதற்குத் தடை விதிப்பு

(கொழும்பு)

பங்களாதேஷின் முன்னாள் சனாதிபதி குசேன் முகமட் இர்சாத் இலங்கைக்கு வரவிருந்த பயணத்தை அந்நாட்டு அதிகாரிகள் தடைசெய்துள்ளனர்.

கடந்த செவ்வாய் அன்று இடம்பெற இருந்த மேற்படி விஜயத்திற்கே தடைவிதிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: பங்களாதேஷின் முன்னாள் சனாதிபதி பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அந்நாட்டு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். எனவே இவர் நாட்டை விட்டு தப்பிச் செல்லலாம் என்ற ஐயத்திலேயே அவரை வெளிநாட்டுக்குச் செல்வதற்குத்தடைவிதித் துள்ளதாக கூறப்படுகிறது. (32)

# இளையோரை நல்வழிப்படுத்தும் விளையாட்டை கல்வியின் ஓரங்கமாக விருத்தி செய்யவேண்டும்

### -மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் வலியுறுத்து

மாணவர்கள் அடைய வேண்டிய குறிக்கோள்களை, நற்பண்புகளை அடைவதற்கு வழிநடத்தும் விளையாட்டும் கல்வியின் ஒரு அங்கமாக விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டே இச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. கட்டுப்பாடுடன் கூடிய நற்பண்புகள் எட்டப்படுவதற்கு விளையாட்டு வழி காட்டுகிறது. விளையாட்டை பாடசாலையில் தனித்துவமாக மேம்பாடடைய வைக்கும் வழிமுறைகளை நீங்கள் கற்றிருக்கிறீர்கள். இவற்றை நடைமுறைப் படுத்துவதனூடாக எமது மாணவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் வழிகாட்ட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் வன்னியன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ கல்விக் கழகமும், தமிழீழ விளையாட்டுத்துறையும் இணைந்து கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்காக நடத்தப்பட்ட பாடசாலை விளையாட்டு முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கின் நிறைவு வைபவத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விளையாட்டுத் துறைச் செயலாளர் அன்ரன் அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தமர்வின் விரிவுரையாளர்களாக கலாநிதி எதிர் வீரசிங்கம், ம.பத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பாடசாலைகளில் விளையாட்டு நுட்பங்களை வழங்கக்கூடிய பயிற்றுநர்கள் இன்மை, தகைமை பெற்ற மத்தியஸ்தர்கள் இன்மை, குறுகிய காலத்தில் அனைத்துப் பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளும் நடத்தி முடிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம், விளையாட்டு உபகரணங்கள் பற்றாக்குறை, சமூகத்தில் விளையாட்டு மீதான விருப்பு இன்மை போன்ற குறைபாடுகளே எமது மாவட்டத்தின் விளையாட்டு அபிவிருத்திக்கான பிரதான இடையூறுகளாக பங்குபற்றுனர்களால் முன்வைக்கப்பட்டது.

மாவட்டங்கள்தோறும் பாடசாலை விளையாட்டுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு சுயாதீனமாக, பாடசாலைகள் கல்வியோடு இணைந்த செயற்பாடாக விளையாட்டையும் ஆண்டு முழுவதுமாக செயற்படுத்தும் போதே தமிழர் தாயகத்தில் விளையாட்டபிவிருத்தி ஏற்படும் என முதல் நாட்கலந்துரையாடலில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்திருந்தார். இச்செயலமர்வு வன்னியின் ஏனைய கல்வி வலயங்களிலும் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சோ)

# வி.பி.கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி சுவீகரித்தது

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற வி.பி கிண்ணத்துக்கான முக்கோண ஒருநாள் போட்டித் தொடரை அவுஸ்திரேலிய அணி வென்று கிண்ணத்தைத் தக்க வைத்துக்கொண்டது.




இத்தொடரில் நேற்று சிட்னியில் நடைபெற்ற இரண்டாவது இறுதிப்போட்டியில் இந்திய அணியை 208 என்ற பெரும் ஓட்ட எண்ணிக்கை வித்தியாசத்தில் வெற்றிபெற்று அவுஸ்திரேலியா சாதனை படைத்தது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா இந்திய பந்துவீச்சுக்களை துவம்சம் செய்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 359 ஓட்டங்களைக் குவித்தது. இவ்வணியின் வீரர் மத்தியு கெய்டன் 126 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பதிலுக்கு 360 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். 7 ஆவது விக்கெட் இணையான பதான், பதானி ஆகியோர் மட்டும் நிலைத்து ஆடி ஓட்ட எண்ணிக்கையை சற்று அதிகரித்தது. இறுதியில் அவ்வணி அனைத்து விக்கெட்டுக்களையுமிழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மத்தியு கெய்டனும் தொடர் நாயகனாக அடம் கில்கிறிஸ்டும் அறிவிக்கப்பட்டனர்.

# பாராளுமன்றைக் கலைத்து தேர்தல் நடத்துவது நெருக்கடியைத் தீவிரப்படுத்தவே உதவும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் செயலாளர் இரா. சம்பந்தன்

(கொழும்பு)

சனாதிபதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முன்வந்திருப்பது நடைமுறை அரசியல் நெருக கடியை தீவிரப்படுத்தவே உதவும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் செயலாளர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து முன்னெடுத்திருக்கும் இந்த நடவடிக்கை காரணமாக தமிழர் தேசியப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு ஏற்படப் போவ தில்லை.

சனாதிபதியும், பிரதமரும் இரு வேறு திசைகளில் இருந்த வண் ணம் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. அனைத்து சிங்களக் கட்சிகளும் நடைமுறை முறுகலைப் பயன்படுத்தி ஆட்சி யைக் கைப்பற்றவே முனைகின் றனர்.

எனவே எந்தவொரு சிங்கள கட்சியினாலும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பெற்றுத்தர முடியாது சிங்கள இனவாதிகள் எதிர்வரும் தேர்தல் மூலமாக விடுதலைப்புலிகளின் 25 உறுப் பினர்கள் நாடாளுமன்றம் செல்வது எனக் கூறிவருவது குறித்து கருத் துத் தெரிவித்த சம்பந்தன், இதில் ஒளிவு மறைவுக்கு இடமில்லை என்றார்.

தமிழ் மக்களின் பிரகாசமான எதிர்காலத்துக்காக வடக்கு-கிழக்கு தமிழ் தலைவர்கள் ஒன்றிணைவது நல்லதொரு அறிகுறியாகும் எனத் தெரிவித்தார். (32)

# பொதுத்தேர்தலைப் பிற்போடுமாறு இந்தியா சனாதிபதியிடம் கோரவில்லை!

## - இந்தியத் தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நடத்துவதைப் பிற்போடுமாறு சிறிலங்கா சனாதிப தியிடம் இந்தியா கோரி இருந்தது என்று வெளியான ஊகங்களை இந்தியா நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் வெளி யிட்டுள்ள குறிப்பொன்றில்;

இந்தியா, சிறிலங்கா சனாதி பதிக்கும் பிரதம மந்திரிக்கும் இடையே மத்தியஸ்தராகச் செயற் படாது என்றும், சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் நிருபன்சென் இற்கும் சிறிலங்கா சனாதிபதிக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இரண்டு மணித்தியாலப் பேச்சுவார்த்தைகள் வழமையாக நடைபெறும் ஒன்று என்றும் தெரி வித்துள்ளது.

# பாதுகாப்பு காரணமாக சனாதிபதி கேகாலை செல்லவில்லையாம்

(கொழும்பு)

கேகாலை நகரில் நடைபெற இருந்த கூட்டம் ஒன்றிற்கு பாது காப்பு காரணமாக சனாதிபதி சந்திரிகா செல்லவில்லை யெனத் தெரிவிக்கப்படுகிறது

எனினும் சனாதிபதியால் நியமிக் கப்பட்ட பொ.ஐ. முன்னணியின் உறுப்பினரான டி.எம். ஜெயரட்ண உரையாற்றும் போது, அமைச் சரவை மட்டத்தில் உள்ள 17 அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாகவும்,

தாம் ஆட்சி அமைத்த பின்னர் அந்த சம்பந்தப்பட்ட 17 அமைச்சர் கள் மீதும் இலஞ்ச ஊழல் குற்றச் சாட்டை எதிர்த்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக சுட்டிக்காட்டியுள்ளார். (32)

## - அனுராதபுரம் கெப்பிட்டிக் கொலாவையில் -

# தொண்டு நிறுவனம் மீது குண்டுவீச்சு மூன்று பௌத்த பிக்குகள் கைது

அனுராதபுரம் கெப்பிட்டி கொலா வையில் கிறிஸ்தவ தொண்டு நிறுவனமான "வேள்ட்விஷன்" அலுவலக கட்டடம் பெற்றோல் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இதனுடன் தொடர் புடையவர்கள் என்ற சந்தேகத் தின்பேரில் மூன்று புத்தபிக்குகள் பொலிசாரினால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்கள் வான் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோதே கெப்பிட்டிகொ லாவை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட புத்த பிக்குகள் பயணம் செய்துகொள்ள விருந்த வான் போலியான வாகனப் பதிவு இலக்கத்தைக் கொண்டி ருந்ததாகவும், குண்டுத் தாக்கு தலை இவர்களே மேற்கொண்ட தற்கான தடயங்கள் கிடைக்கப் பெற்றதாகவும் பொலிசார் தெரிவித் துள்ளனர்.மேற்படி பிக்குகள் மேல் மாகாணத்தின் ஹோமாகம, பிலி யந்தல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மேல்மாகாணப் பகுதிகளில் கிறிஸ்தவ தேவால யங்கள் பலவற்றின்மீது தாக்குதல் நடத்திவரும் பௌத்த தீவிர வாதிகளுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருக்கின்றதா என்பன தொடர்பான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வறுமையில் வாடும் மக்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்கு கின் றோம் என்ற போர்வையில் பல கிறிஸ்தவ அமைப்புக்கள் பௌத் தர்களை கிறிஸ்தவர்களாக மத மாற்றம் செய்து வருகிறார்கள் என்று பௌத்த தீவிரவாதிகள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டி வருகின்றமை தெரிந்ததே.

இந்த வேளட்விஷன் அமைப் பினர் போரினால் பாதிப்புக்குள்ளான கெப்பிட்டிக் கொலாவை எல்லைப் புறச் சிங்கள மக்களுக்குச் சேவை யாற்றி வருகின்றது எனவும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

## -பருத்தித்துறை சரசாலை வீதிப் பகுதியில்-

# புதிய மினி முகாம்களை அமைப்பதில் படையினர் தீவிரம்!

பருத்தித்துறை- சரசாலை வீதிப் பகுதியில் அமைந்துள்ள முக்கிய சந்திப்பகுதிகளில் புதிய மினி முகாம்களை அமைப்பதில் படையி னர் முனைப்புக் காட்டி வருகின் றனர்.

குறிப்பாக விராலிச் சந்தி, அந்த ணர் திடல் வெளி மற்றும் அதனை யண்டியுள்ள கண்டல்க் காட்டுப் பகுதிகளிலேயே இம்மினி முகாம் கள் கடந்த ஓரிரு வாரங்களாக நிறுவப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இப்பகுதிகளிலமைந் திருந்த இராணுவக் காவலரண்க ளுடன் இணைந்ததாகவே இம்மினி முகாம்கள் அமைக்கப்பட்டு வரு கின்றன.

இதனிடையே இம் முகாம்கள் அமைக்கும் பணிகளுக்கென பெருமளவு முட்கம்பிகளும் மற்றும் பனைமரக் குற்றிகளும் இராணுவ வாகனங்கள் மூலம் எடுத்துவரப் பட்டு பறிக்கப்பட்டுமுள்ளது.

இதேவேளை மேற்படி கண்டல் காட்டுப் பகுதியில், பருத்தித்துறை- சரசாலை வீதியோரமாக அண்மை யில் புதிய இராணுவ முகாமொன்று நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆனைக்கோட்டை- கூழாவடி இராணுவமுகாமில் படையினர் கலகமடக்கும் பயிற்சி

ஆனைக்கோட்டை கூழாவடி இராணுவமுகாமில் நிலை கொண்டுள்ள படை யினருக்கு விசேடபயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய்-யாழ்ப்பாணம் பிரதானவீதியில் அமைந்துள்ள மேற்படி முகாமில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் பயிற்சி நடவடிக்கைகளின் போது சுமார் 500 வரையிலான படையினர் சூட்டுப்பயிற்சி, மற்றும் கலக மடக்கும் பயிற்சிகளில் ஈடுபடு கின்றனர்.

இப்பயிற்சிகளுக்காக படையி னரால் நடத்தப்பட்டு வரும் சரமா ரியான துப்பாக்கிப் பிரயோகத்தால் அப் பகுதிகளில் மக்களிடையேபீதி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாறு பயிற்சிகள் இடம்பெறும் காலை மற்றும் மாலை வேளைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள் ளது. (33)

### பாராளு..

உள்நாட்டு அரசியல் விவகாரங்கள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அப்பாற்பட்டது என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

அரசியல் சூழ்நிலைகள் குறித் துக் கருத்துக்களை வெளியிடுவது கண்காணிப்புக்குழுவிற்கு உரிய விடயம் அல்ல எனவும் அவர் கூறினார்.

### சி.சு.

கூட்டுத் தாபனம் சுயாதீன ரூபவா ஹினி கூட்டுத் தாபனம், லக்கண்ட மற்றும் லேக்கஹவுஷ் நிறுவனம் என்பனவும் அரச அச்சுத் திணைக் களம், அரச அச்சக கூட்டுத்தாபனம், செலசின நிறுவனம், தொலைத் தொடர்பு மறுசீரமைப்பு ஆணைக் குழு என்பன இவரின் பொறுப்பின் கீழ் வருகிறது.

### சனாதிபதி

விரும்பும் அரசாங்கம் ஒன்றைத் தெரிவு செய் வதற்கு மக்களுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத் துள்ளது என்றும் மக்கள் புத்திசாலித்தனமாக தமது தீர்மானத்தை எடுக்க வேண் டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

நிட்டம்புவ சாஜிதவன இராம விகாரையின் பிரதம மதகுரு பிட்டி யாகொடடி நிமலதேரர் கருத்துத் தெரிவிக்கையில்;

மக்கள் தமது நலனையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக் கூடிய அரசாங்கம் ஒன்றைத் தேர்ந் தெடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப் பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

### பாராளுமன்றம்...

களில் சனாதிபதி பாராளுமன்றத் தைக் கலைத்து புதிய தேர்தலை நடத்துவதென்ற முடிவை அறி வித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெகான் பெரேரா தெரிவிக்கையில், விடுதலைப்புலிகளுடன் யார் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்துவது என்பதற்கான பதிலை வரப்போகும் தேர்தல் வழங்காது. சந்திரிகா குமாரதுங்கவின் கட்சி தேர்தலில் வெற்றி பெறுமாயின் ஜே.வி.பி. உடனான சந்திரிகா குமாரதுங்கவின் உடன்படிக்கை யின் படி புலிகளுடனான சமாதா னப்பேச்சுவார்த்தை நெருக்கடிக் குள்ளாகும். ரணில் தலைமையி லான கட்சி வெற்றி பெறுமாயின் நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதியின் நெருக்குவாரங் களுக்கு மீண்டும் முகங்கொடுக்க நேரிடும் என்றார். (25)

### பிரதி...

சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்ட வர்களை பதவியில் இருந்து நீக்கு வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

### ம.வி...

புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாடும் செல் லுபடியற்றதாகும். எனவே நாட்டில் புதிய ஒரு யுத்தம் மேற்கொள்ளக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் ராஜிதசேனாரட்ண தெரிவித்தார்.(32)


## துயர் பகிர்வோம்

அமரர்

**இராமலிங்கம் செல்லத்துரை**

புதுக்குளம், மன்னார்.

எமது வலயக்கல்வி அலுவலகத்தில் கணிதபாட ஆசிரிய ஆலோசகராக கடமைபுரியும் திரு.செ.நவரட்ணராசா அவர்களின் தந்தையார் அமரர் இ.செல்லத்துரை அவர்கள் கடந்த 03-02-2004 இறையடி சேர்ந்த மரணச் செய்தி கேட்டு ஆறாத்துயரடைகின்றோம். இத்துயரில் மூதூரிலுள்ள அவர்தம் குடும்பத்தினருடன் நாமும் எம் துயரைப் பகிர்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

வலயக்கல்விப்பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள்,
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்.

(சி.4106)



மீண்டும்

கோலாகலத் திறப்பு விழா

கமலா ஸ்ருடியோ

நல்லையா படப்பிடிப்பாளர்

எனும் பெயரில் 09.02.2004 இன்றுமுதல் எமது பழைய இடத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை சகல நண்பர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

உரிமையாளர்:-
நல்லையா பிரேம்நாத்.

(4222)



## சோலர் மானியம்

பிறந்திருக்கும் புதுவருடத்தை ஒளிமயமாக்க சோலர் ஒன்றைப் பெற்று வாழ்வை இன்ப ஒளியாக்குங்கள்.

எமது வாடிக்கையாளர்களே உங்கள் நன்மை கருதி உலக வங்கியில் மானியத் தொகை 10000/= 31.12.2004 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது. உங்களுக்குத் தேவையான சோலர் விபரங்களை எமது சமாச வங்கியின் நடைமுறைக்கு அமைவாக சோலர் ஒன்றைப் பெற்று உங்கள் இல்லங்களை ஒளிமயமாக்குங்கள்.

செயலாளர்
கிளி/மாவட்ட சி.க.கூ.ச. சமாசம்,
பிரதான வீதி,
கிளிநொச்சி.

(4218)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.